**கவனிக்க.**-2021.04.01 ஆந் திகதிய 2222 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2223 - 2021 අප්‍රේල් මස 09 වැනි සිකුරාදා - 2021.04.09

*2223 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 748 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 763 |


**கவனிக்க.**- (i) சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

745-B 82220-5,403 (2021/ 04)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்
சிங்கள மொழி/தமிழ் மொழி

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, மே மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டப்ளியூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, மாச்சு 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | நுவரெலியா மாவட்டத்தின் கந்தபொல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |

04-222

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, மே மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டப்ளியூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, மாச்சு 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தும்பனை | உடபலாத்த மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தும்பனை பிரிவின் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | ஹாரிஸ்பற்று | மெதசியபற்று இலக்கம் 01 பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹாரிஸ்பற்று பிரிவின் விவாகப் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | உடபலாத்த | கந்துகர இஹல மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடபலாத்த பிரிவின் விவாகப் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | மினிபே | கந்தபஹல வடக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுதும்பர பிரிவின் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | தெல்தோட்டை | போபிட்டிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பாத்தஹேவாஹெட்ட பிரிவின் விவாகப் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | பஸ்பாகே கோறளை | பஸ்பாகே கோறளைப் பிரிவின் மேலதிக விவாகப் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பன்வில | பாத்ததும்பரை பிரிவின் மேலதிக விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | பஸ்பாகே கோறளை | பஸ்பாகே கோறளை பிரிவின் மேலதிக விவாகப் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | தும்பனை | தும்பனை பிரிவின் மேலதிக விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

*04-223*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழி மூலம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, மே மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டப்ளியு. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, மாச்சு 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | ஹட்டன் டிக்கோயா நகரம் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

04-224

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்
சிங்கள மொழி/தமிழ் மொழி

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, மே மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டப்ளியூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, மாச்சு 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடபலாத்த | உடபலாத்த பிரிவின் கம்பளை கஹட்ட பிட்டிய பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | தெல்தோட்டை | பாத்தஹேவாஹெட்ட பிரிவின் ஹேவா விஸ்ஸ கோறளையின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | உடபலாத்த | உடபலாத்த பிரிவின் இல்லவத்துர பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தொலுவ | உடபலாத்த பிரிவின் ஆடியா கடவத்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | உடபலாத்த | உடபலாத்த பிரிவின் புஸ்ஸெல்லாவ பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | உடுநுவர | உடுநுவர பிரிவின் ஹன்தெஸ்ஸ பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | யட்டிநுவர | உடுநுவர மற்றும் யட்டிநுவர பிரிவின் தெஹிஅங்க முருதலாவ பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | மெததும்பர | பாத்ததும்பர மற்றும் மெததும்பர பிரிவின் கும்புக்கந்துர பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | உடுதும்பர | உடுதும்பர பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

*04-225*

---

## இலங்கைப் பாராளுமன்றம்

## வெற்றிடங்கள்

## உணவுபான உதவியாளர் பதவி

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள "உணவு பான உதவியாளர்" பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கு சிறந்த உடலாரோக்கியமும், நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன்கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பங்கள் 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உணவுபான உதவியாளர்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.)

01. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 28,250-9 × 300 - 10 × 330 - 3 × 380- ரூபா 35,390.00 ஆகும். (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 62,000.00).

02. **கல்வித் தகைமைகள்**.- சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தி அடங்கலாக, கணிதத்திலும் மற்றும் ஆங்கில மொழியிலும் சித்திகளுடன் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

03. **தொழில் தகைமைகள்**.- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் (SLITHM) /தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் (NAITA)/இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) அல்லது அதற்கு இணையான ஒரு வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத கால ஒரு அடிப்படை உணவக சேவை பாடநெறியை/உணவக சேவை பாடநெறியை பின்பற்றி வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.

04. **அனுபவம்**.- ஒரு நட்சத்திர வகுதி ஹோட்டலில்/அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவன உணவக சேவையில்/உணவு பான உதவியாளர் பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத காலம் பணியாற்றியிருத்தல்.

05. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

06. **ஆட்சேர்ப்பு முறை**.- ஒரு எழுத்துமூல/ தொழில் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

07. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்**.-

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அநாதைகள், விதவைகள் /தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

(iv) அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

08. கீழ்காணும் சான்றிதழ்களின் (மூலப்பிரதிகளல்ல) பிரதிகளை விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

09. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

10. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

டபிள்யூ. பி. டீ. தசநாயக,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2021, ஏப்பிறல் 09.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

**உணவுபான உதவியாளர் பதவி**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ..........................................................................................
..........................................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ..........................................................
..........................................................................................................................................................

(இ) முழுப்பெயர் (Mr./Mrs. /Miss) : ..............................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

02. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

03. (அ) தனிப்பட்ட முகவரி: ..........................................................................................................
..........................................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி : ..........................................................................................................
..........................................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(இ) பரீட்சைக்கான அனுமதி அட்டையை அஞ்சலில் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

தனிப்பட்ட : ☐ அலுவலக : ☐

04. (i) பிறந்த திகதி : ஆண்டு :---- மாதம்:---- திகதி:----.

(பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் ஒரு பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள்:---- மாதங்கள்:---- நாட்கள்:----.

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா : (விவாகமானவர் /விவாகமாகாதவர்) :-----.

06. பால்நிலை : (ஆண் /பெண்) :----.

07. இலங்கைப் பிரசையா: (ஆம்/இல்லை) :----.

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| பரீட்சை | பாடங்கள் | சித்தி | ஆண்டு |
|---|---|---|---|
| க. பொ. த. (சா./த.) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. தொழில் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

10. வேறு தகைமைகள் :

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

11. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

| நிறுவனம் | பதவி | சேவை காலம் |
|---|---|---|
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்: ..........................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி:..........................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி:..........................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்:..........................................................................................

(உ) கொடுப்பனவுகள்:..........................................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம் : ..........................................................................................

13. நீங்கள் ஏதாவது ஒரு குற்றத்திற்காக குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீர்களா?
ஆம் எனில், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

14. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீர்களா?
ஆம் எனில், அது பற்றிய விபரங்களை தருக.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

---------

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:----.

04-492/1

# இலங்கைப் பாராளுமன்றம்

## வெற்றிடங்கள்

### உதவி நூலகர் பதவி

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள "உதவி நூலகர்" பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கு சிறந்த உடலாரோக்கியமும், நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்கள் கல்வி/ தொழில் தகைமை சான்றிதழ்களின் அல்லது அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் தான் விண்ணப்பிக்கும் பதவியை தனது விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.)

01. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,340-3 × 755 - 13 × 1,030 - ரூபா 62,995.00 ஆகும். (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 95,000.00).

02. **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**.-

2.1 (அ) க. பொ. த. (சா./ த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம்/ ஆங்கில இலக்கியம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து நூலகம் மற்றும் தகவல் அறிவியல் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) க. பொ. த. (சா./ த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம்/ ஆங்கில இலக்கியம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு பட்டத்தையும் மற்றும் இலங்கை நூலக சங்கத்தின் நூலக அறிவியல், ஆவண அறிவியல் மற்றும் தகவல் அறிவியல் இறுதி ஆண்டு பரீட்சைக்குரிய சான்றிதழை அல்லது களனிப் பல்கலைக்கழகத்தின் நூலகம் மற்றும் ஆவண சேவைகள் பற்றிய தொழில் உயர் சான்றிதழையும் பெற்றிருத்தல்.

2.2 மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்த பின்னர் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நூலகத்தில் பணியாற்றிய மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2.3 அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திலிருந்து பெற்ற தகவல் தொழில்நுட்ப தகைமையுடைய விண்ணப்ப தாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

03. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்கு குறையாமலும் மற்றும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

04. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

05. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்**.-

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்;

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்;

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அநாதைகள், விதவைகள் /தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும். அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவார்கள்;

(iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

06. கீழ்காணும் சான்றிதழ்களின் (மூலப் பிரதிகளல்ல) பிரதிகளை விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

07. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

08. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

09. விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு விடயம் பொய்யானது என ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், அவர் தகுதியற்றவர் எனக் குறிப்பிடுவதற்கும், நியமனம் பெற்றதன் பின்னர் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாகுவார்.

10. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள/ நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

டபிள்யூ. பி. டீ. தசநாயக,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2021, ஏப்பிறல் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

**உதவி நூலகர் பதவி**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ..........................................................................................................
..................................................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ..............................................................................
.............................................................................................................................................................

(இ) முழுப்பெயர் (Mr./Mrs. /Miss) : ........................................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

02. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

03. (அ) தனிப்பட்ட முகவரி: ..........................................................................................................................................
..................................................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி : ...................................................................... ......................................................................
...............................................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டை அஞ்சலில் அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி -

தனிப்பட்ட : ☐ அலுவலக : ☐

04. (i) பிறந்த திகதி :- ஆண்டு :---- மாதம்:---- திகதி:----.

(பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் ஒரு பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:

வருடங்கள்:---- மாதங்கள்:---- நாட்கள்:----.

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா : (விவாகமானவர் /விவாகமாகாதவர்) :-

06. பால்நிலை : (ஆண் /பெண்) :

07. இலங்கைப் பிரசையா: (ஆம்/இல்லை) :----.

08. கல்வித் தகைமைகள் மற்றும் உயர் கல்வித்தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| பரீட்சை | பாடங்கள் | சித்தி | ஆண்டு |
|---|---|---|---|
| க. பொ. த. (சா./த.) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் /ஆங்கில இலக்கியம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| பட்டம் | பாடங்கள் | பல்கலைக்கழகம் | சித்தியடைந்த ஆண்டு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

09. தொழில் தகைமை : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :----.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

10. வேறு தகைமைகள் :----.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

11. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :-----.

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:-

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்: ..........................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி:..........................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி:..........................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்:..........................................................................................................

(உ) கொடுப்பனவுகள்:..........................................................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம் : ..........................................................................................................

13. நீங்கள் ஏதாவது ஒரு குற்றத்திற்காக குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீர்களா?
ஆம் எனில், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

14. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீர்களா?
ஆம் எனில், அது பற்றிய விபரங்களைத் தருக.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

திகதி:----. ---------,

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

---

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில்...................................................................................................................... பதவியை வகிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................................................ அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றேன். இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். இந்தப் பதவிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், இவர் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் / விடுவிக்கப்படமாட்டார்.

திகதி :----. ---------,

திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்

(பதவி முத்திரை)

04-492/2

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உணவு ஆணையாளர் திணைக்களம்

*உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை பகுதியின் வேலை மேற்பார்வையாளர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021*

இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை பகுதியின் வேலை மேற்பார்வையாளர் பதவியின் III ஆம் தரத்தில் நிலவும் பதவி வெற்றிடமொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய A4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுரைகளுக்கமைய தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிடப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "உணவு ஆணையாளர், உணவு ஆணையாளர் திணைக்களம், இலக்கம் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வேலை மேற்பார்வையாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2021, மே மாதம் 15 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பம் அல்லது அதனுடன் தொடர்பான ஆவணம் பற்றி செய்யப்படும் முறைப்பாடுகள் சம்பந்தமாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளிடையே ஒருவர் வேலை மேற்பார்வையாளர் III ஆம் தரப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவார்.

2. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடைய தாகும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.
(ii) இப்பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அந்த மூன்று (03) வருட காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
(iii) 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக் கைக்கமைய, 5 வருடத்தினுள் II ஆம் மட்டத்திற்குரிய அரச கரும மொழி தொடர்பிலான தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணங்களுக்கும் திணைக்களம் சார்ந்த ஏனைய பணிப்புரைகளுக்கும் இப்பதவி கட்டுப்படுதல் வேண்டும்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு 03/ 2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கமைய MN 3 - 2016 இன் கீழ் ரூபா 31,040-10 x 445-11 x 660-10 x 730-10 x 750 - ரூபா. 57,550 (மாதாந்த) சம்பளப் படிமுறைகள் உரித்துடையதாகும்.

4. (i) **கல்வித் தகைமைகள்** :

(1) பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் திறமைச் சித்திகளுடன் விஞ்ஞான/ கணிதத் துறைக்குரிய மூன்று பாடங்களுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

(2) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் விஞ்ஞானம் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

4. (ii) **தொழில் தகைமைகள் :**

(1) மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்.

அல்லது

(2) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா சான்றிதழ்.

அல்லது

(3) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா சான்றிதழ்.

அல்லது

(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப சான்றிதழ்.

அல்லது

(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் 1 ஆம் பகுதியை நிறைவு செய்திருத்தல்.

அல்லது

(6) தொழில் துறையுடன் தொடர்பான தேசிய தொழிற் பயிற்சி தகைமை சான்றிதழின் (NVQ) 6 ஆவது மட்டத்தை நிறைவு செய்திருத்தல்.

அல்லது

(7) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களை வழங்கும் நிறுனங்களிடம் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **உடற் தகைமைகள்.**- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்குரிய உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
(ii) நன்னடத்தையுடைவராக இருத்தல் வேண்டும்.
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அந்தத் தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **எழுத்துப் பரீட்சை :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | காலம் (மணித்தியாலம்) | உச்சப் புள்ளிகள் | சித்தியடை வதற்கான புள்ளிகள் | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|
| 1. விடயம் சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 3 மணித்தியாலம் | 100 | 40% | கட்டிட நிர்மாணம், திட்ட வரைவு தயாரித்தல். பராமரிப்பு (குளிரூட்டி, நீர்க் குழாய்கள், மின்சாரம்), தளக் கோளத் திட்டத்தை (Plan) வாசித்தல், வேலைத் தளமொன்றில் ஊழியர் முகாமைத்துவம் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் |
| 2. நுண்ணறிவுப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40% | பொது அறிவு |

8. (i) **நேர்முகப் பரீட்சை.**- புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளைச் சோதிப்பதற்காக மாத்திரம் நடாத்தப்படும்.

9. **பரீட்சைக்கான நிபந்தனைகள் :**

(i) முறையாக விண்ணப்பங்களை அனுப்பியிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தேர்வுநாடி தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளால் மேற்கொள்ளப்படும் போக்குவரத்துச் செலவுகள் அல்லது ஏனைய எந்தவொரு செலவுக்கும் எவ்வித செலுத்துகைகளும் மேற்கொள்ளப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தேர்வுநாடி தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக

(அ) ஆளடையாளத் திணைக்களத்தினால் வெளியிடப் பட்டுள்ள தேசிய அடையாள அட்டை

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். வேண்டிக் கொள்ளப்பட்ட மொழிமூலத்தை பின்னர் மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக உணவு ஆணையாளர் இடமளிப்பார். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுதலானது தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

(vii) இந்தப் பரீட்சை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை :**

(i) மாதிரி விண்ணப்பப்படிவம் A4 (24 × 29 செ.மீ.) அளவிலான தாளைப் பயன்படுத்தி இலக்கம் 01 முதல் 04 வரையிலான பகுதிகளை முதலாவது பக்கத்திலும் இலக்கம் 05 முதல் மிகுதிப் பகுதிகளை ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு தயாரித்து தமது கையெழுத்தினாலேயே சரியாக பூரணப்படுத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத மற்றும் பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தபாலில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்துக்கொள்ளுமுகமாக நேரகாலத்துடன் விண்ணப்பங்களை தபாலில் இடுமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படு கின்றது.

(iv) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

(v) பரீட்சைக் கட்டணம் 750 ரூபா ஆகும். உணவு ஆணையாளரின் பெயரில் இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் பேணிவரப்படும் 7042667 ஆம் இலக்க கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளைக்கும் செலுத்திப் பெறப்பட்ட வைப்புச் சீட்டை கழறாதவாறு உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப் பத்திரத்தின் மற்றும் வைப்புச் சீட்டின் பிரதியை உங்களிடம் வைத்துக்கொள்வது பிரயோசனமாக இருக்கும். எந்தக் காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. அத்துடன் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

(vi) சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், தாம் வசிக்கும் பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிஸ், முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், வருடச் சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதிலும் அதிகமான வருடாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையொன்றின் அதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது பிற மத ஸ்தலங்களுக்குப் பொறுப்பான தகைமையுடைய மதகுருமார்கள் போன்றோரில் ஒருவரின் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

(vii) அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் புணிபுரியும் விண்ணப்பதாரிகள் அவர்களது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(viii) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

12. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் உணவு ஆணையாளருக்கே உண்டு. சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் பரீட்சைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கும் பொதுவான சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

ஜே. கிருஷ்ணமூர்த்தி,
உணவு ஆணையாளர்,
உணவு ஆணையாளர் திணைக்களம்.

உணவு ஆணையாளர் திணைக்களம்,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02,
2021, மாச்சு 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை பகுதியின் வேலை மேற்பார்வையாளர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

Open Competitive Examination for the Recruitment of Supervisory Management Assistant (Technical Service Category) Inspector of Works Grade III of Food Commissioner's Department - 2021

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

• பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1.

1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA HERATH )

1.2 பின்னால் வரும் பெயரை ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் பயன்படுத்தி பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம்: HERATH H.M.S.K)

1.3 முழுப் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.

2.1 நிரந்தர முகவரி :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

4. 4.1 பால் :
ஆண் - 0
பெண் - 1 | |
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5. 5.1 பிறந்த திகதி :
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

5.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
வருடங்கள்: | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

6. கல்வித் தகைமைகள் :

6.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :
(i) பரீட்சை ஆண்டு, மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

6.2 க. பொ. த (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சை ஆண்டு, மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 3 | |
| 2 | | 4 | |

6.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருப்பின் :
(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் :----.
(iii) சுட்டிலக்கம் :----.

7. தொழிற் தகைமைகள் :

(i) :----.
(ii) :----.

8. அனுபவம் :----.

9. நீங்கள் குற்றமொன்றுக்காக எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?

ஆம் : ☐ இல்லை : ☐

(உரிய கூட்டில் √ அடையாளத்தை இடவும்)

(ஆம் எனில், விபரத்தைக் குறிப்பிடவும்) :----.

10. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வைப்புச் சீட்டு பற்றிய விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளை : ----.
(ii) செலுத்திய தொகை ரூபா :----.

| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வைப்புச் சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும் (வைப்புச் சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்) |
|---|

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மை யானவை மற்றும் சரியானவை என கௌரவபூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதியை பூரணப்படுத்தாமல் மற்றும்/ அல்லது தவறான முறையில் பூரணப்படுத்துவதனால் ஏற்படும் இழப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும், இதில் சகல பகுதிகளும் சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்./வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டால் பணி நீக்கத்திற்கு ஆளாகுவேன் என்பதையும் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்/வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றிக்கொள்ளமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும், அந்த வைப்புச் சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதெனவும், ................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை ஊடாக உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

13. விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் இருப்பவராயின் திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ................................................ இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில், நிரந்தர/ அமைய/ தற்காலிக உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும், இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

----

திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை ஊடாக உறுதிப்படுத்தவும்).

4-276

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2021)

2015.09.01 ஆந் திகதிய 1930/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தொழில்நுட்ப சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பில் இருந்து விசேட வகுப்பிற்கு இணைத்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் தரமுயர்த்துவதற்காக நடாத்தப்படும் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2021, யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையை தாமதப்படுத்துவதற்கும் இரத்துச் செய்வதற்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் கீழ் அரச நிர்வாகச் செயலாளருக்கு அதிகாரமுண்டு.

2. 2019.12.31 ஆந் திகதியன்று-

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுதியின் I ஆவது தரத்தில் ஆகக் குறைந்தது (5) வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்து உரிய சம்பள ஏற்றங்கள் (5) இனைப் பெற்றுக்கொண்டுள்ள,

(ii) தரமுயர்வுத் தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருடத்தினுள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள,

(iii) மூன்றாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுவார்கள்.

3. விசேட வகுப்பு அலுவலர்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள சம்பளத் திட்டம் செல்லுபடியாகும்.
(MN-7-2016 4 ஆம் படிமுறை) ரூபா 43,845.00 - 8 x 755 - 18 x 1,030 - ரூபா 68,425.00

4. இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பிற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படும்.

(i) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்திற்கு 2019.01.01 ஆந் திகதியிலிருந்து 2019.12.31 ஆந் திகதி வரை ஒவ்வோர் திணைக்களத்திலும் மற்றும் அமைச்சிலும் அவ்வந்த பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும் ;

(ii) விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டியது 2019.01.01 ஆந் திகதியிலிருந்து 2019.12.31 ஆந் திகதி வரை காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைகளை நிரப்புவதற்கு மட்டுமேயாகும்.

(iii) இணைத்துக்கொள்ளப்படும் சதவீதங்கள் :
மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 40%
சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் 60%

(iv) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்படுமிடத்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் சதவீதம் 25% ஆகவும், சேவைமூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படும் சதவீதம் 75% ஆக இருக்க வேண்டியிருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 03 ஆக இருக்கும்போது மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும் வெற்றிடங்களின் சதவீதம் 33.33% மற்றும் சேவைமூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் சதவீதம் 66.66% ஆகவும் இருக்க வேண்டும் ;

(v) இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஐ விட அதிகமாக இருப்பின் மேற்படி 04.iii பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தின்கீழ் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும் ;

(vi) பொது நிருவாக அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதில் சித்தியடைபவர்கள் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய தேவைகளையும் பூரணப்படுத்தப்பட்டதாக அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும் தேர்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சையின் திறமைகளின் ஒழுங்கில் மற்றும் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடைபெற்ற தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் விசேட வகுப்பிற்கான பதவியேற்றம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும்.

(vii) வெற்றிடங்களை நிரப்பும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரிகளுக்கிடையில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களின் புள்ளி ஒழுங்கிற்கு ஏற்ப குறித்துரைத்த தரமுயர்த்தலுக்காக கவனத்திற்கொள்ளப்படும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரர் சுயமாக விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2021.05.10 ஆந் திகதிக்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

(i) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

(ii) அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டு கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பப்படிவம் :**

(i) "ஏ4" அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். 1 முதல் 5 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சு மூலம் தயாரித்துக் கொள்ள முடியுமாயினும் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழி யிலும் எழுதப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். அதனால், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது சாலவும் சிறந்ததாகும்.

(iii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பரீட்சைக்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம்மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

(iv) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும், அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் தோற்றும் அலுவலர்கள் 600.00 ரூபாவைப் பரீட்சைக் கட்டணமாக 20-03-02-13 என்ற பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்புக்கு யாதேனும் தபால் /உப தபால் அலுவலகங்களுக்கு அல்லது பிரதேச/மாவட்டச் செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமானது. இப்பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை மீளப்பெறுவதற்கோ அல்லது வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

8.

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் குறித்த பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம், உள்வாங்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவை, விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப் பத்தினை உறுதிப்படுத்தலும், திணைக்களத் தலைவரின் பரிந்துரையும் அத்தாட்சிப்படுத்தலுடனும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும். பரீட்சைக்கு விண்ணப்பித்த அலுவலர்கள் அனைவருக்கும் பரீட் சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாகக் கருதுதல் கூடாது.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகக் குறிப்பிட்டு, இலங்கைப்பரீட்சைத்திணைக்களத்தினால்செய்தித்தாள்களிலும்திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளத்திலும் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு (நிறுவக மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையிடம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்துமிடத்து போது விண்ணப்பதாரி தாங்கள் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினையும் திருத்தமாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின் மேலுள்ள விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றினை விரைவாகப்

பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்வது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரணை செய்யும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதாவதொரு தகவலினை உறுதிப்படுத்துவதற்காக தாங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பத்தின் பிரதியை, பரீட்சைக் கட்டணம் செலுத்தல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் அது குறித்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும்போது பதிவு செய்த பற்றுச்சீட்டினைத் தயார்படுத்தி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

(iii) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியுள்ளதுடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

09. மேலே (08) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

10. **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இப்பரீட்சையின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுச் செயலாளரினால் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. **பரீட்சை நடைமுறைகள்**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப் பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(i) I ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை 02 வினாப்பத்திரங் களைக் கொண்டிருக்கும் :-

(1) உளச்சார்புப் பரீட்சை.- நேரம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்
(2) முகாமைவத்துவம்.- நேரம் : 3 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

தகுதிபெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :

**உளச் சார்பு-பாட இலக்கம்** (1).-

தனக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் சாதாரண செயலாற்றுகை மட்டத்தினைத் தாண்டிய செயற்றிறனைக் கொண்டதாக நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் அறிவு, ஆற்றல் மற்றும் மனோநிலை என்பவற்றினை பெற்றிருக்கின்றாரா என்றும் அவற்றினைப் பிரயோகித்தலின்போது உச்ச திறமையினைக் காட்டுகின்றனரா எனவும் அளவிட்டுப் பார்க்கும் ஒரு பரீட்சிப்பாகும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிப்பதற்கான அமைப்பினைக் கொண்ட 50 வினாக்களையுடையதாகக் காணப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :

**முகாமைத்துவம்-பாட இலக்கம் (2) :**

(i) முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்
(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள் :
திட்டமிடல்
தீர்மானங்கள் எடுத்தல்
தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகள்
ஒழுங்கமைப்பு
பதவிநிலைப்படுத்தல்
செயற்படுத்துதல்
ஊக்குவிப்புச் செயன்முறை
தலைமைத்துவம்

நிர்வாகம்
நிர்வாகக் கொள்கைச் செயன்முறை
(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்
(iv) முகாமைத்துவச் சூழல்
(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

12. பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாகவும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டவிதிகளை மீறின், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார். இவ்வறிவித்தலுக்கு உரித்துடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப யாதேனுமொரு பரீட்சார்த்தி அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் காணுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது அதற்குப் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தம் இரத்துச் செய்யப்பட முடியும்.

13. இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

14. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப்பாடின்மை காணப்படுமாயின் அப்போது சிங்கள மொழியிலுள்ள வாசகமே செல்லுபடியானதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2021, மாச்சு 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பயன்பாட்டுக்குரியது)

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2021)**

Limited Competitive Examination for Promotion of the Officers in Grade I of Sri Lanka Technological Service to Special Grade - 2019 (2021)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

01. (அ) நீங்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது மத்திய அரசாங்கத்தின் கீழா? அல்லது மாகாண அரசாங்க சேவையிலா?

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.)

| அரசாங்க சேவை | இலக்கம் |
|---|---|
| மத்திய அரசு | 10 |
| மேல் மாகாணம் | 01 |
| மத்திய மாகாணம் | 02 |
| தென் மாகாணம் | 03 |
| வட மாகாணம் | 04 |

| அரசாங்க சேவை | இலக்கம் |
|---|---|
| கிழக்கு மாகாணம் | 05 |
| வடமேல் மாகாணம் | 06 |
| வடமத்திய மாகாணம் | 07 |
| ஊவா மாகாணம் | 08 |
| சப்பிரகமுவ மாகாணம் | 09 |

(ஆ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
உதாரணம் : (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ----.
உதாரணம் : (GUNAWARDHANA, H. M. S. K.)

(ஈ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(உ) அலுவலக முகவரி (இம் முகவரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்) :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(சிங்களத்தில்/தமிழில்) :----.

(ஊ) பால் (ஆண்/பெண்) ☐
(ஆண்-0, பெண்-1) (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(எ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ஏ) கையடக்க தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. நீங்கள் பணிபுரியும் திணைக்களம் :----.

3. பதவிப் பெயர் :----.

4. 2021.05.10 ஆந் திகதியன்று சேவைக்காலம் : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5. (i) பிறந்த திகதி- ஆண்டு: ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) 2021.05.10 ஆந் திகதியன்று வயது- வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

> பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை அல்லாதவிடத்து பரீட்சைக் கட்டணமான 600.00 ரூபாவைச் செலுத்திய பற்றுச் சீட்டினை இவ்விடத்தில் நன்றாக ஒட்டுக. (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடத்தில் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
செலுத்திய தொகை :----.

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்றும், மேல்குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துள்ளது என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

----
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அல்லது தமது பிரதேச அலுவலகத் தலைவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது அலுவலகத்தில் தற்போது பணிபுரியும் அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./திருமதி/ செல்வி ..............................என்பவர் .......................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பனையும், பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதில் இருந்து விடுதலை என்றும் அல்லது குறித்துரைத்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதனையும் மேற்படி பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை மற்றும் சான்றிதழ்**

(i) இவ்விண்ணப்பதாரிக்கு எதிராக நடாத்தப்படும் அல்லது நடாத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக திணைக்களத் தலைவரின் பரிந்துரை :
----------------------------------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------------------------------

(ii) மேலே இல. 01 முதல் 05 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப் பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் அவர் தகுதியானவர் என்பதையும், பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதிலிருந்து விடுதலை என்றும் அல்லது உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், கையொப்பமும் திகதியும் இடப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

**குறிப்பு**.- உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று பரீட்சார்த்தியின் தனிப்பட்ட கோவைக்கு அனுப்பப்பட வேண்டும். மற்றைய பிரதி காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

04-340

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

*முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)*

*1. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் எழுத்துப் போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, யூலை மாதம் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*2. இப்பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள் மற்றும் அதற்குரிய நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.*

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| *கொழும்பு* | *01* |
| *கண்டி* | *02* |
| *பதுளை* | *03* |
| *மாத்தறை* | *04* |
| *யாழ்ப்பாணம்* | *05* |

*மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிலையம் ஒன்றுக்கான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதியளவானதாகக் காணப்படாதுவிடின் மேற்படி பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு மேற்படி விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவார்கள். விண்ணப்பிக்கும் நகரத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாதுவிடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.*

*3. இப்பரீட்சையினை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.*

*4. முழுமைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை, அதிவிசேட தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறமை அடிப்படையில் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் முதலில் நடைபெறும் போட்டிப் பரீட்சையின் இறுதித் திகதிக்கு கணிக்கப்படும். அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை குறித்த பரீட்சையின் இறுதித் திகதிக்குப் பின்னர் மீண்டும் பகிரங்க அறிவித்தலொன்றின் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறு பகிரங்கப்படுத்தியதன் பின்னர் வெற்றிடங்கள் எண்ணிக்கை மீண்டும் திருத்தியமைக்கப்படமாட்டாது. அத்திகதிக்குரிய வெற்றிடங்களில் 50% நியமனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைவதற்காக குறித்த ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெற வேண்டும். தகைமையுடைய விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் அதிவிசேட தரத்துக்கு நியமனங்கள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பரீட்சிப்பதாக மாத்திரம் அமைவதோடு அங்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.*

*5. 03/2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் படி MN 07-2016 சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 41,580 - 11 × 755 - 10 × 1,080 - ரூபா 68,425 ஆகும்.*

*6.* ***பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள்.****- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிராத இணைந்த சேவைக்குரிய,*

*(அ) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் I ஆந் தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல்.*

*அல்லது*

(ஆ) குறைந்தபட்சம் சேவையில் 08 வருடங்களுக்கு குறையாத முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் II இலுள்ள உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தினை சித்தியடைந்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் 05 வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல்.

மற்றும்

(ஈ) உரிய திகதியில் குறித்த வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையை முழுமைப்படுத்தியிருத்தல்.

(i) **குறிப்பு** :

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தற்போதுள்ள தரத்திற்கு ஏற்ப மேற்படி (அ), (ஆ), (இ) இன் மூலம் காட்டப்பட்டுள்ள முனைப்புடனான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தற்போதுள்ள தரத்திற்குறித்தாக சித்தியெய்த வேண்டிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய முழுமைப்படுத்தப்பட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கையினுள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு சித்தியெய்தியுள்ள ஆனால் நிர்வாக காரணங்களின் அடிப்படையில் குறித்த வினைத்திறன் காண் சலுகை தாமதமடைந்துள்ளதன் காரணமாக சேவையில் நிரந்தரம் செய்தல் அல்லது பதவியுயர்த்தல் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு இழக்கப்படுவதன் காரணமாக மாத்திரம் திருப்திகரமான சேவைக் காலத்தை முழுமைப்படுத்துவதற்கு முடியாமற் போன உத்தியோகத்தர்களும், இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

(ii) **குறிப்பு** :

எனினும், அவ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிப்பதற்கோ பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுவது பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையாகாது என்பதுடன், அதிவிசேட தரத்துக்கு பதவியுயர்த்தப்படும் கடிதம் வழங்கப்படுவது உரிய வகையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளதாக திருப்திப்பட்டு குறித்த நிரந்தரப்படுத்தலை/பதவியுயர்வினை பெற்றதன் பின்னராகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அதனை தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி 25.5 செ. மீ. × 21 (A4) அளவிலான தாளில் விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். 01 முதல் 05 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும், 06 தொடக்கம் 09 வரையான இலக்கங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

(ஆ) **நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல்.-**

*பரீட்சார்த்திகளினால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், அதன் நிழற்படப் பிரதியொன்றுடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். திணைக்களத் தலைவரின் பரிந்துரையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நிழற்படப் பிரதியை சுய விபரக்கோவையில் உள்ளடக்குதல் வேண்டும். அதன் பின்னர் மூலப்பிரதியை தமது திணைக்களத் தலைவரூடாக -*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,*
*ஒழுங்குபடுத்தல் (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்) கிளை,*
*இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,*
*தபால் பெட்டி 1503,*
*கொழும்பு.*

*என்னும் முகவரிக்கு 2021.05.10 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். திணைக்களத் தலைவரூடாக அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரத்துக்கு மேலதிகமாக வேறு எதுவித விண்ணப்பப்படிவங்களின் பிரதிகளையும் தனிப்பட்ட வகையில் அனுப்பி வைத்தல் ஆகாது. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பமும் சகல வகையிலும் முழுமைப்படுத்தப்பட்டதென திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதோடு விண்ணப்பத்திலுள்ள 14 ஆவது உறுதியுரையிலும் கையொப்பமிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அல்லது அத்திணைக்களத்தின் பிற அலுவலகருக்கோ அல்லது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பலாகாது. விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அதிவிசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2019 (2020)" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.*

(இ) (i) *முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. முதற்தடவையாக தோற்றும் விண்ணப்பதாரிகளெனக் கருதப்படுவது பொது எழுதுவினைஞர் சேவையில் அதிவிசேட வகுப்பிற்கு நியமனம் பெறுவதற்காக 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 அல்லது 2001 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1985 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின் அதி விசேட வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின் அதி விசேட வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1999 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச கணக்குப்பதியுநர் சேவையின்/ அரச சிறாப்பர் சேவையின் அல்லது அரச களஞ்சியப் பொறுப்பாளர் சேவையின் அதி விசேட வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு மற்றும் 2006, 2007, 2011, 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் ஒரு பரீட்சைக்கேனும் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மட்டுமே ஆவர்.*

(ii) *பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். மேலும் இக்கட்டணத்தை நாட்டில் எந்தவொரு தபாலகம்/ உபதபாலகத்தில் பணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தியமைக்காகப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டிவிட வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும் மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனளிக்கக்கூடும்.*

(ஈ) விண்ணப்பப்படிவமோ அல்லது அது தொடர்பான கடிதம் ஒன்றோ தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ என கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

*08.* ***பரீட்சைக்கு அனுமதித்தல்*** :

(அ) உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய முறையில் விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து உரிய திகதிக்கு முன்னர் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் பரீட்சைத் தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதிப்பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக்கோவை ஒன்று இவ் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதன் பிரதியும் தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பனவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன், கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி விபரங்களுடனான ஒரு கோரிக்கைக் கடிதம் மற்றும் அனுமதி அட்டை அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றை தொலைநகல் ஊடாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக் கூடும்.

பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவர் எனக் கருதப்படமாட்டார்.

*09.* ***பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்*** :

பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

*10.* ***பிழையான தகவல்கள் அறிவிப்பதற்கான தண்டனை***:

(அ) இப்பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் அளித்துள்ள தகவல்கள் பிழையானவை எனப் பிற்காலத்தில் தெரிய வந்தால் அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் மேலும் ஒரு நியமனம் பெறுவதற்காக கவனத்திற்கொள்ளப்படாததுடன் இப்பரீட்சை காரணமாக வழங்கப்பட்டுள்ள ஒரு நியமனத்தை இல்லாதொழிக்கவும் அல்லது அரசாங்க சேவையின் பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

11. **பரீட்சை மொழி ஊடகம்.**- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாம் சேவைக்கு சேர்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. **பரீட்சை நடைமுறை.**- எழுத்துப் பரீட்சை கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கியதாகும்.

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|
| (1) அலுவலக முகாமை | 2 மணித்தியாலம் | 100 |
| (2) அலுவலக முறைமை | 2 மணித்தியாலம் | 100 |
| (3) தாபனச் செயற்பாடுகள் மற்றும் செயலொழுங்கு விதிகள் | 2 மணித்தியாலம் | 100 |
| (4) அரச நிதி முகாமை | 2 மணித்தியாலம் | 100 |
| (5) பொது வினாத்தாள் | 1 1/2 மணித்தியாலம் | 100 |

13. பாடத்திட்டம்.- பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் பாடங்கள் பற்றி அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

(i) **அலுவலக முகாமை** (காலம் - 02 மணித்தியாலம் புள்ளிகள் - 100 )
ஒழுங்குக் கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு தொடர்பான அடிப்படைகள், பணிப் பகுப்பாய்வு, பணி மதிப்பீடு, தலைமைத்துவம், மேற்பார்வை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தொடர்பாடல், மக்கள் தொடர்பு, ஒருங்கிணைப்பும் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு.

(ii) **அலுவலக முறைமை** (02 மணித்தியாலங்கள், புள்ளிகள் - 100 )
அலுவலக முறைமைகள் தொடர்பான அடிப்படைகள், அலுவலக நடைமுறைகள், ஆவணங்கள் மற்றும் கோவைப்படுத்தல், மாதிரிப் படிவங்களை திட்டமிடல், கடிதங்களைப் பரிமாறுதல், அலுவலக உபகரணங்களின் பயன்பாடு பற்றிய கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலம் மற்றும் சுற்றுப்புறம், தொழில் விபரம், பணி ஆய்வு மற்றும் முறைமை ஆய்வு, பணி அளவீடு, அலுவலகச் செயற்பாட்டுக் கைநூல்.

(iii) **தாபனச் செயற்பாடுகள் மற்றும் செயலொழுங்கு விதிகள்** (02 மணித்தியாலங்கள், புள்ளிகள் - 100 )
அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது பின்பற்றவேண்டிய நடைமுறைகள், அரச அலுவலர்களின் தாபனச் செயற்பாடுகள், தனிப்பட்ட கோவைகளின் பராமரிப்பு, அரச ஊழியர்களை நியமனம் செய்தல், இடமாற்றம், தரவுயர்வு வழங்கல், சேவையை முடிவுறுத்தல் ஆகிய பணிகளுக்கான அதிகாரங்களை ஒப்படைத்தல், நலனோம்பல், அரசாங்க அலுவலர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகள், தாபனச் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தினால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள், சுற்றறிக்கைகள் தொடர்பான பொதுவான தெளிவு பரீட்சிக்கப்படும்.

(iv) **அரச நிதி முகாமை** (02 மணித்தியாலங்கள், புள்ளிகள் - 100 )
வருடாந்த மதிப்பீடுகளையும் கணக்குகளையும் சமர்ப்பிக்கும் அலுவலர் ஒருவரின் பொறுப்புக்கள், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தல், நிதியினைப் பொறுப்பேற்றல், கணக்குப் பதிவும், மீளப் பெறுதலும், செலுத்தல்கள், அரச நிதிப் பொறுப்பு, முற்பணம் மற்றும் வங்கிக் கணக்குகள், வழங்கல்களும் சேவைகளும், பெறுகைச் செயற்பாடுகள், பொருட்தொகை மதிப்பீடு, கணக்காய்வு விசாரணைகள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவுச் சுருக்கம், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்கள் அரச நிதிப் பயன்பாடு தொடர்பில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகள், தொடர்பான பொதுவான அறிவு பரீட்சிக்கப்படும்.

(v) **பொது வினாத்தாள்** (1 1/2 மணித்தியாலங்கள், புள்ளிகள் - 100 )
அரசாங்க நிர்வாகத்தின் இயல்புகள், அரசாங்க நிர்வாகத்தின் கட்டமைப்பு, அரசாங்கத்தின் கொள்கைகளும் புதிய அரச மறுசீரமைப்பு, அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்), பாராளுமன்ற பொதுமக்கள் முறைப்பாட்டுச் செயற்குழு, அலுவலக கலாசாரம், தொழில்சார் ஒழுக்கங்களும் நல்லொழுக்கங்களும், அலுவலகத்திலுள்ள பௌதீக வளங்களைச் சிறந்த முறையில் வடிவமைத்தலும் ஊழியர் குழாத்தினரின் நலனோம்பல் செயற்பாடுகளும், பதவி அந்தஸ்து மற்றும் சிவில் அந்தஸ்து தொடர்பாக சமூக விஞ்ஞான ரீதியான அங்கீகாரம், சேவைபெறுநர்களுக்கு அரசாங்க அலுவலர்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்.

*14. நியமனத்திற்காக தெரிவு செய்தல்.-*

(i) *(i) இப்பரீட்சையில் சித்தியெய்து நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைப்பதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40 புள்ளிகள் என்ற விகிதத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பரீட்சையின் போது பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப தயாரிக்கப்படும் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப விண்ணப்பதாரிகளின் தகைமைகளை பரீட்சித்துப் பார்ப்பதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையின் முன்னிலைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் வெற்றிடங்கள் நிலவும், இத்தீவின் எப் பிரதேசத்திலேனும் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றில் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். இணைப்புச் செய்யப்படும் அலுவலகத்தில் நியமனத்தை ஏற்க மறுத்தால் அவரின் நியமனத்தை இரத்துச் செய்து அடுத்ததாக தகைமையுடையவர்களை ஒழுங்கு வரிசையாக அழைத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.*

(ii) *(ii) முதல் நியமனம் கிடைக்கப்பெற்ற நிலையத்தில் குறைந்தபட்சம் 03 வருடம் கட்டாய சேவையில் ஈடுபடுதல் வேண்டும். எவ்வாறு இருந்தபோதிலும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதாவது விசேட காரணத்தினால் அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் ஒரு அலுவலரை இடமாற்றம் செய்வதற்கு அவசியப்படுமாயின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.*

(iii) *எழுத்துப் பரீட்சையின் மூலம் தகைமையினைப் பெற்றுக்கொள்பவர்களின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவிப்புக்கமைய செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பெற்றுக்கொடுக்கப்படும். ஏனைய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள்* www.results.exams.gov.lk *என்ற இணையத்தளத்தில் வெளியிடுதல் அல்லது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.*

*15. அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் 1840/34 ஆம் இலக்க 2013, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய அரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அப் பிரமாணக் குறிப்பின் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டதும் ஏதேனும் திருத்தத்திற்கும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும் அமைய இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் அதிவிசேட தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.*

*16. குறிப்பிட்ட வெற்றிட எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கும், இவ் ஒழுங்கு விதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் தீர்மானம் எடுப்பதற்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.*

*17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

*ஜே. ஜே. ரத்னசிறி,*
*செயலாளர்,*
*அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்*
*மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.*

*அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்*
*மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 07,*
*2021, மாச்சு 26.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதி உயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

Limited Competitive Examination for Appointment to Supra Grade of Public Management Assistants Service - 2019 (2020)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கு ஏற்ப விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உத்தேசிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கம்

| நகரத்தின் பெயர் | நகர இலக்கம் |
|---|---|
| | |

தாங்கள் உள்ளடக்கப்படும் சேவை : ☐

**கவனிக்க வேண்டியது** : மாகாண அரசாங்க சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு அனுமதியில்லை. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு அரசாங்க சேவையின் இணைந்த சேவையை இனங்காணும் குறிகாட்டி "10" என்பதனால் மேற்படி காட்டப்பட்டுள்ள "தாங்கள் உரித்துடைய சேவை" என்பதன் முன் காணப்படும் கூட்டினுள் இலக்கம் 10 இனை இடவும். இதற்கு இணையாக மாகாண அரசாங்க சேவையின் உத்தியோகத்தர்களுக்கும் அவ்வந்த மாகாண அரசாங்க சேவைகளின் அதி உயர் தரத்துடைய பதவிகளுக்கு பதவியுயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுமாயின், அவ்விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டு இலக்கம் தொடர்பாக அவ்வந்த மாகாண சபைகளின் ஊடாக குறித்த பரீட்சை அறிவித்தல் பிரசுரிக்கும் போது ஆலோசனைகள் வழங்கப்படும்.

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்) உதா : ஏ. பீ. சீ. டி. சில்வா )
1.2 முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) : ----.
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)
2.2 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
2.4 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

03. பிறந்த திகதி :
வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

04. பால் (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்) :
ஆண் - 0
பெண் - 1 ☐

05. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

06. விவாக நிலை பற்றி : (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2 ☐

07. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் உள்ளவாறு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

08. இப்பரீட்சை 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பொது எழுதுநர் சேவையின்/1985, 1996 அரச தட்டெழுத்தாளர் சேவையின்/1996 அரச சுருக்கெழுத்தாளர் சேவையின்/ 1999 ஆம் அரச கணக்குப் பதியுநர் சேவையின் /1999 அரச சிறாப்பர் சேவையின் அல்லது 2006, 2007, 2011, 2015 ஆம் ஆண்டுகளில் நடாத்திய அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஏதாவதில் நீர் தோற்றியுள்ளீரா? :----.

09. (i) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு/பொது எழுதுநர் சேவைக்கு/அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் உள்ளவாறு மொத்தச் சேவைக் காலம் :----.

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் பெற்றுள்ள சம்பளமற்ற விடுமுறை நாட்கள் (பிரசவ விடுமுறை தவிர) :----

(iv) அதன்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் முனைப்பான சேவைக்காலம் :----

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

(v) அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில்/பொது எழுதுநர் சேவையில்/அரச தட்டெழுத்தாளர் சேவையில்/அரச சுருக்கெழுத்தாளர் சேவையில்/ அரச கணக்குப் பதியுநர் சேவையில்/ அரச சிறாப்பர் சேவையில்/ அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவையில் நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----

(vi) தற்போதைய தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :----

(vii) நீங்கள் பட்டதாரி ஆயின் பட்டம் பெற்ற ஆண்டும், பல்கலைக்கழகத்தின் பெயரும் :----

(viii) பட்டம் செயல்வலுப்பெறும் திகதி :----

10. (i) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு/பொது எழுதுநர் சேவைக்கு/அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் குறித்த சேவைக்குச் சேர்வதற்கான போட்டிப்பரீட்சைக்குத் தோற்றிய மொழி :----.

(ii) போட்டிப் பரீட்சை இன்றி நீங்கள் பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் குறித்த சேவைக்குச் சேர்வதற்காக நீங்கள் தகைமையடைந்த மொழி :----.

11. தங்களது பிரத்தியேகக் கோவையினைப் பேணிச் செல்லும் அலுவலகம் மற்றும் நிறுவனத் தலைவர் உட்பட முகவரியினை தெளிவாக குறிப்பிடவும் :----.

12. பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு ஒட்டவும் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உடன் வைத்திருத்தல் பிரயோசனப்படலாம். |

13. **விண்ணப்பதாரியின் சான்றுரை** :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கு எட்டிய அளவில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட காலத்திற்குள் கிடைக்க வேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன், (திணைக்கள சேவைப் பரீட்சைகளில் சித்தியடையும் நிபந்தனையான சம்பள ஏற்றங்கள் தவிர்ந்த) அக்காலப் பகுதிக்குள் எவ்விதத்திலான ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகவில்லை எனவும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகைமையுள்ளது என்றும் இவ் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் நான் ............. தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/பரீட்சைக் கட்டணம் செலுத்திய .............................. ஆம் இலக்க ..................... ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும், இப் பரீட்சை பற்றிய பிரமாணத்தின்படி நான் தகைமையற்றவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்நிலையிலும் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான எத்தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன் என்றும் மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளிற்கும் கட்டுப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **நிறுவனத் தலைவரின் சான்றுரை** :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி* .......................................... எனும் விண்ணப்பதாரர் ................................ ஆம் திகதி முதல் இவ்வலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் ..................... ஆம் திகதியன்று அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இன் ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனையேதும் பெறவில்லை என்றும், இவ் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்பட்டதென்றும் அவை சரியானவை என்றும், இவர் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பதற்கு தகுதியுடையவரென்றும்/ குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார்* என்றும், விண்ணப்பதாரர் உரிய வர்த்தமானி அறிவித்தலின்படி பரீட்சைக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 13 ஆம் இலக்க 1972.10.02 ஆந் திகதிய சுற்றறிக்கை கடிதப்படி அலுவலரின் வரலாற்றுத் தாளில் அது பற்றி குறிக்கப்பட்டதென்றும் ...................... ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை உள்ளீர்ப்புக் கடிதம்/நியமனக் கடிதத்தின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் ..................... மற்றும் திகதி .................... ஆகும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
உத்தியோகபூர்வ பதவி முத்திரையை இடவும். * ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்.
திகதி :----.

4-355

## அரசாங்கசேவை ஆணைக்குழு

## வெளிநாட்டமைச்சு

### இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2020 (2021)

இலங்கை வெளிநாட்டுச் சேவை (இனி முதற்கொண்டு "சேவை" எனக்குறிப்பிடப்படும்) தரம் III இலுள்ள 40 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இவ்வறிவித்தலின் 2 ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டவற்றின் அடிப்படையில், தகுதிவாய்ந்த விண்ணப்பதாரி களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது, அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2021, யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

01. **ஆட்சேர்ப்புச்செய்யும் முறை**: இவ்வறிவித்தலுக்கேற்ப, தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள், எழுத்துப் பரீட்சைக்கும் தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றவேண்டும் என்பதுடன், எழுத்துப் பரீட்சையுடன் நேர்முகப் பரீட்சையும் சேர்ந்து பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனத்திற்கென தெரிவு செய்யப்படுவார்கள்.

02. **தேவைப்படும் தகைமைகள்**:

I. **கல்விசார்/தொழில்சார் தகைமைகள்**:

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றபட்டம், அல்லது
- பட்டம் பெறுவதற்கு தகுதிவாய்ந்த நிறுவகம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றபட்டம், அல்லது
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு பல்கலைக்கழகத் திலிருந்து பெற்றபட்டம் (இதுபற்றியதிலான பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆவண ஆதாரங்கள், விண்ணப்பதாரியால் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

II. **உடல் தகுதிகள்**:

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப்பகுதியிலோ அல்லது உலகில் எந்தநாட்டிலோ தமது பதவியில் சேவையாற்றுவதற்கேற்ற உடல், உளதகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

III. **பிற** :

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். (இரட்டைக் குடியுரிமையுள்ளவர்கள், இலங்கை வெளிநாட்டுச் சேவைக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், தமது வெளிநாட்டுக் குடியுரிமையை இரத்துச்செய்வதுடன், அவரின் சேவைக் காலத்தில் வேறு எந்தநாட்டினதும் குடியுரிமையையும் பெறலாகாது.)

(ஆ) சிறந்த ஒழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று, இந்தப் பதவிக்கான எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :

(i) எந்தவொரு மதத்தினதும் தலைவராக நியமிக்கப்பட்டவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கவோ அல்லது இதற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ தகுதியற்றவர்களாவர்.

(ii) எந்தவொரு நபரும் மூன்று தடவைகளுக்கு மேல் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தகுதியற்றவராவர்.

(iii) தேவைப்படும் சகல தகைமைகளையும், சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

03. **சேவைக்கான பணிக் கடப்பாடும் நிபந்தனைகளும்**:

I. இச்சேவைக்கென தெரிவுசெய்யப்படுவோர் அரசாங்க சேவை நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளின் அடிப்படையில், 06.12.2016 ஆந் திகதியிட்ட இலங்கை வெளிநாட்டுச் சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அதில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அல்லது இனிமேல் மேற்கொள்ளப்படக் கூடிய திருத்தங்களுக்கும் உட்பட்டவர்களாகவிருப்பர்.

II. நிரந்தரமான இப்பதவியின் இளைப்பாற்று ஊதியத்திட்டம், எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் படக்கூடிய கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகவிருக்கும்.

III. இப்பதவிக்கான நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டது. இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம், இலங்கை வெளிநாட்டுச் சேவையின் தரம் III இற்கு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் 03 வருட காலத்தினுள் 1 ஆவது "வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை" யில் சித்தியடைய வேண்டும்.

IV. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை, இல. : 18/2020 இன் பிரகாரம் உத்தியோகபூர்வ மொழியில்/மொழிகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

V. இந்த நியமனமானது அரசாங்கசேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தாபனக்கோவை, நிதிசார் முறைமைகள் மற்றும் பிற திணைக்கள ஒழுங்குமுறைகள் ஆகியவற்றுக்கு உட்பட்டதாகும்.

VI. இந்த வர்த்தமானி அறிவித்தலில் அல்லது இலங்கை வெளிநாட்டுச் சேவை பிரமாணக் குறிப்பில் வரையறுக்கப்பட்ட எந்தவொரு தகைமைகளையோ நிபந்தனைகளையோ பூர்த்திசெய்யாத அல்லது தவறான தகவல்களைச் சமர்ப்பிக்கும் எந்தவொரு விண்ணப்பதாரிகளையும், அவர்கள் பதவியில் நியமிக்கப்பட்ட பின்னரேனும், பதவிநீக்கம் செய்வதற்கான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

04. **வயதெல்லை**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று, 22 வயதை எட்டியவராகவும் 30 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதன்படி, 10.05.1999 அன்றோ அல்லதுஅதற்கு முன்பாகவோ பிறந்தவர்களும் 10.05.1991 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்தவர்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்).

ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளெனில், விண்ணப்ப முடிவுத் திகதியன்று 37 வயதை அடையாதவராகவும் (அதன்படி 10.05.1984 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்தவர்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்) திருப்திகரமான சேவைப் பதிவினைக்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :

(i) மேலே 04 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டதன் நோக்கத்திற்காக, அரசாங்கசேவையின் விண்ணப்பதாரி என்பது, (தாபனக் கோவையின் 1 ஆம் அத்தியாயத்தில் வரையறுக்கப்பட்டவாறு) விண்ணப்ப முடிவுத் திகதியன்று அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தருமாவார் எனப் பொருள்படும்.

(ii) அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடனடிமுந்தைய ஐந்து வருடகால சேவையில் திருப்திகரமான பதிவினைக் கொண்டிருந்தாலேயன்றியோ அல்லது அவரது மொத்த சேவைக்காலம் 05 வருடங்களுக்கு குறைவானதெனில் அச்சேவைக் காலத்தின்போதோ இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராவர்.

(iii) அரசாங்க சேவையிலுள்ள உறுப்பினர் ஒருவர் இந்த விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடனடி முந்தைய ஐந்து வருடகால சேவையில் உரிய திகதியில் எல்லா சம்பள அதிகரிப்பினையும் பெற்றிருந்தால் அல்லது குறிப்பிட்ட நிறுவனத்தில் அவரது சேவைக்காலம் ஐந்து வருடங்களுக்குக் குறைவாகவிருப்பின் அச்சேவைக் காலத்தின்போது அவர் செய்த எந்தவொரு குற்றத்திற்காகவும் (எச்சரிக்கைதவிர) எந்தவொரு தண்டனையையும் பெற்றிருக்கவில்லையென்றால், அவர் திருப்திகரமான சேவைப்பதிவினைக் கொண்டிருக்கிறார் எனக்கருதப்படுவார்.

(iv) அரசாங்கசேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/ நிறுவன தலைவர்கள் மூலமாக அனுப்புதல் வேண்டும்.

05. **சம்பளஅளவு**: 25.02.2016 ஆந் திகதியிட்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கை, இல: 03/2016 இன் அட்டவணை I இன் பிரகாரம், இச்சேவைக்குப் பொருத்தமான மாதாந்த சம்பளம் பின்வருமாறு:

ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 ×2, 170 - ரூபா 110,895 (எஸ்எல் - 1-2016) - மாதாந்தம்.

06. **எழுத்துப்பரீட்சை**:

I. இப்பரீட்சை, அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால், யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

II. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

III. விண்ணப்பதாரி, மேற்குறிப்பிட்ட மூன்று மொழிகளில் ஒன்றில் மட்டுமே பரீட்சைக்கு விண்ணப்பிப்பதுடன் விண்ணப்பித்த மொழியில் மட்டுமே பரீட்சையில் தோற்றவும் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்பட்ட மொழி மூலமானது, பின்னர் மாற்றப்படலாகாது.

IV. எழுத்துப்பரீட்சை பின்வரும் பாடங்களிலுள்ள வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் பகுதி I, பொது போட்டிப் பரீட்சையின்கீழ், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படக்கூடும். அவ்வாறாயின், இந்த அறிவித்தலின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும், இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கான வெற்றிடங்கள் தொடர்பான பொதுப்போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களாக கருதப்படும்.

**பகுதி** I:

| வினாத்தாள் | காலம் | வினாத்தாளின் தன்மை | தேர்ச்சிப் புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவுப்பரீட்சை | 1 1/2 மணித்தியாலங்கள் | பல்தெரிவு வினாக்கள் மற்றும்/ அல்லது குறுகிய வினாக்கள் அடங்கியது. இதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். | 40 |
| கிரகித்தல் | 2 மணித்தியாலங்கள் | பல்தெரிவு வினாக்கள் மற்றும்/ அல்லது குறுகிய வினாக்கள் அடங்கியது. இதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். | 40 |

பகுதி II :

| பாட இல. | பாடம் | காலம் | புள்ளிகள் | குறைந்தளவு புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | பொது வினாத்தாள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02 | உலக விவகாரங்கள் I | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 03 | உலக விவகாரங்கள் II | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 04 | சுருக்கம் | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 05 | மொழித்திறன் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**குறிப்பு** :

(i) சகல பரீட்சார்த்திகளும் எழுத்துப் பரீட்சையின் பகுதி I இற்குத் தோற்ற வேண்டும்.

(ii) எழுத்துப் பரீட்சை பகுதி I இன் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளுடன் இரு பாடங்களிலும் மொத்தமாக குறைந்தபட்சம் 100 புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே எழுத்துப் பரீட்சையின் பகுதி II இற்குத் தோற்றுவதற்குத் தகுதியானவர்களாவர்.

V. எழுத்துப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

VI. தொழில் முறைப் பரீட்சை : பொருத்தமற்றது

VII. தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சை: அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்திற்கமைவாக நடாத்தப்படும்.

VIII. பொது நேர்முகப் பரீட்சை : புள்ளிகள் அறிவிக்கப்படாது.
நோக்கங்கள்: இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பிலும் அதன் பிரகாரம் வெளியான வர்த்தமானி அறிவிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைச் சரிபார்த்தல் மற்றும் உடல் தகுதியைப் பரிசோதித்தல்.

IX. எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்:

**பகுதி** I :

(அ) **நுண்ணறிவுப் பரீட்சை :**

இந்த வினாத்தாள், பரீட்சார்த்திகளின் காரணகாரியங்கள், பொருத்தப்பாடு, வெளிப்படுத்தல், நோக்கு, மொழிபெயர்த்தல், பிரச்சனைக்குத் தீர்வுகாணல், வழமையான உறவுகளைப் புரிந்துகொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்தொடர்தல் ஆகியவற்றிலுள்ள திறமையை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட வினாக்களை உள்ளடக்கியது.

(ஆ) **கிரகித்தல் :**

இதிலுள்ள வினாக்கள், பரீட்சார்த்திகளின் புரிந்து கொள்ளும் திறன், தொடர்பாடல், தொகுத்துரைத்தல், விமர்சனம் மற்றும் ஆக்கத்திறன் ஆகியவற்றை அளவிட வடிவமைக்கப்பட்டது.

**பகுதி** II :

(அ) **பொது வினாத்தாள் :**

இந்த வினாத்தாள் இலங்கையின் அரசியல், சமூக, கலாச்சார மற்றும் பொருளாதாரச் சூழல் பற்றியும் நடப்பு தேசிய மற்றும் சர்வதேச நலங்கள் பற்றிய விடயங்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகள் பற்றியதிலும் பரீட்சார்த்திக்கு இருக்கக்கூடிய அறிவினைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கென வடிவமைக்கப்பட்டது.

(ஆ) **உலக விவகாரங்கள்** I :

இந்த வினாத்தாள் நடப்பு உலக அரசியல் நிகழ்வுகள், ஐக்கிய நாடுகள் மற்றும் பிற சர்வதேச நிறுவனங்கள், மோதல் சூழ்நிலைகள் மற்றும் பல்வேறு தேசிய, சர்வதேச இயக்கங்களின் நிகழ்வுகள், அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் உலகளாவிய போக்குகளையும் அவை இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் பற்றி ஆராய்வதில் விண்ணப்பதாரியின் திறனைப் பரீட்சித்துப்பார்ப்பதற்கென வடிவமைக்கப்பட்டது.

(இ) **உலக விவகாரங்கள்** II:

இந்த வினாத்தாள் வர்த்தக, பொருளாதார அபிவிருத்தியின் சமீபத்தைய போக்குகள், அவற்றுக்கும் இலங்கைக்குமான தொடர்பு, இதில் சர்வதேச நிறுவனங்கள் வகிக்கும் பங்கு, பிராந்திய பொருளாதார குழுக்களின் தாக்கம், சுற்றாடல் மற்றும் நிலையான அபிவிருத்தி மற்றும் இலங்கையில் அவற்றின் தொடர்பு ஆகியவற்றை உள்ளடக்கிய வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ஈ) **சுருக்கம் :**

இந்த வினாத்தாள் கொடுக்கப்பட்ட பந்திகளில் உள்ள அர்த்தத்தை நன்றாகப் புரிந்துகொண்டு, அதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கவர்ச்சியான முறையில் வெளிப்படுத்துவதில் விண்ணப்பதாரிக்கு உள்ள திறனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டது.

(உ) **மொழித்தேர்ச்சி வினாத்தாள்:**

இவ்வினாத்தாள், விண்ணப்பதாரியின் மொழித்தேர்ச்சியை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்டது. (இவ்வினாத்தாள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ளன. இவ்வினாத்தாளுக்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். இவ்வினாத்தாளுக்கு வழங்கப்படும் கால அளவு 3 மணித்தியாலங்கள்.) சிங்களம் அல்லது தமிழ்மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள், ஆங்கில மொழிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஆங்கில மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவோர், சிங்களமொழி அல்லது தமிழ்மொழி பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

07. **தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சை:**

I. சகல ஏழு (07) வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்தளவு தேர்ச்சிப் புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமாகவும் செயலாளரால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டுப் புள்ளியான 350 இற்கு குறையாத அல்லது அதற்கு மேற்பட்ட மொத்தப் புள்ளிகளையும் பெற்ற விண்ணப்பதாரிகள் மட்டுமே தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். ஆனபோதிலும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது, நிரப்பப்பட வேண்டிய பதவிவெற்றிடங்களின் எண்ணிக்கையின் ஐந்து மடங்கைவிடவும் அதிகமாக இருக்கக்கூடாது.

II. தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் 100 ஆகும்.

III. வெட்டுப்புள்ளிக்கான குறைந்தபட்ச மொத்தப் புள்ளிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் குறைக்கப்படமாட்டாது.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகுதியுடைமை மதிப்பீட்டுக்கென நியமிக்கப்பட்ட ஒரு நேர்காணல் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இந்த நேர்முகப் பரீட்சையின் நோக்கம், விண்ணப்பதாரி இச்சேவைக்குப் பொருத்தமானவரா என்பதை மதிப்பீடு செய்வதாகும். இக்குழு, விண்ணப்பதாரின் நுண்ணறிவு, மனவிழிப்புணர்வு, ஆளுமை போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கும். விண்ணப்பதாரியின் பிற மொழித்தேர்ச்சி,

உயர் கல்வித்தகைமைகள் மற்றும் கணிணி அறிவு போன்றவையும் இந்த நேர்முகப்பரீட்சையின் போது மதிப்பீடு செய்யப்படும்.

V. விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்காணல் குழுவிடம் இருக்காது.

VI. தகுதி வரிசையானது எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதியுடைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப்பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இத்தகுதி வரிசையின் அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

VII. தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சையின் புள்ளியிடல் திட்டம் வருமாறு:

| | தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சை - புள்ளியிடல் பிரிவுகள் | தனித்தனி புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | **மேலதிக கல்வித் தகைமை** | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் | | 20 |
| | **சிறப்புப் பட்டம்** | | |
| | i. முதல் வகுப்புடனான பட்டம் | 20 | |
| | ii. இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடனான பட்டம் | 18 | |
| | iii. இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவுடனான பட்டம் | 16 | |
| | **பொதுபட்டம்** | 18 | |
| | iv. முதல் வகுப்புடனான பட்டம் | 16 | |
| | v. இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடனான பட்டம் | 14 | |
| | vi. இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவுடனான பட்டம் | | |
| 2. | **பிற/தொழில்சார் தகைமை** | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டம் | | 15 |
| | i. பட்டப்பின் படிப்பு | 15 | |
| | ii. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (ஒரு வருடத்திற்கு குறையாத) | 13 | |
| | iii. அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவகத்தின் மூலமாகப் பெற்ற டிப்ளோமா (06 மாதங்கள்/ 720 மணித்தியாலங்களுக்கு குறையாத) | 10 | |
| | iv. டிப்ளோமா/ கற்கைநெறிச் சான்றிதழ் (03 மாதங்கள்/ 360 மணித்தியாலங்களுக்கு குறையாத) | 08 | |
| 3. | **ஆங்கில மொழித்தேர்ச்சி** | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டம் | | 15 |
| | i. ஆங்கில சிறப்புபட்டம் | 15 | |
| | ii. ஆங்கிலத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் (பொது இளமாணிப் பட்டம்) | 08 | |
| | iii. ஆங்கில மூலத்தில் பெற்ற பட்டம் | 07 | |
| | iv. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவகத்தில் பெற்ற டிப்ளோமா (01 வருடத்திற்கு மேற்பட்ட) அல்லது TOFEL ( TOEFL-iBT புள்ளி 79, TOEFL- CBT புள்ளி 213, TOEFL-PBT புள்ளி 550 அல்லது அதற்கு மேல்) அல்லது IELTS (புள்ளி 6.0 அல்லது அதற்கு மேல்) அல்லது அதே போன்ற தகைமைகள் | 07 | |
| | v. க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்திருப்பின் (இலங்கை அல்லது லண்டன்) | | 10 |
| | அதிவிசேட சித்தி | 05 | |
| | விசேட சித்தி | 04 | |
| | திறமைச் சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |

| தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சை - புள்ளியிடல் பிரிவுகள் | | தனித்தனி புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 4. | **வெளிநாட்டு மொழிகளில் தேர்ச்சி**<br>அரபு, சீன (மண்டரின்), பிரெஞ்சு, ஜேர்மன், ஹிந்தி, இத்தாலி, ஜப்பானிய, கொரிய, ரஷ்ய மற்றும் ஸ்பானிய மொழிகளில் தேர்ச்சி | | 10 |
| | i. இந்த மொழிகளில் ஒன்றைப் பாடமாக எடுத்த பல்கலைக்கழக பட்டம் (கட்டாயமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமாகவிருத்தல் வேண்டும்.) | 10 | |
| | ii. க.பொ.த (உயர்தரம்) | | |
| | அதிவிசேட சித்தி | 09 | |
| | விசேட சித்தி | 08 | |
| | திறமைச்சித்தி | 07 | |
| | சாதாரண சித்தி | 06 | |
| | iii. க.பொ.த (சாதாரணதரம்) | | |
| | அதிவிசேட சித்தி | 05 | |
| | விசேட சித்தி | 04 | |
| | திறமைச்சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |
| | iv. அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்ற டிப்ளோமா (06 மாதங்கள்/ 720 மணித்தியாலங்களுக்கு குறையாத) | 05 | |
| | v. அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்ற கற்கைநெறிச் சான்றிதழ் (03 மாதங்கள்/ 360 மணித்தியாலங்களுக்கு குறையாத) | 03 | |
| 5. | **கணினி திறன்கள்** | | 05 |
| | i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திடமிருந்து பெற்ற தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் பட்டம் | 05 | |
| | ii. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவகத்தில் பெற்ற தகவல்தொழில்நுட்ப டிப்ளோமா) (ஒரு வருடத்திற்கு குறையாத) | 03 | |
| | iii. அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவகம் ஒன்றிலிருந்து பெற்ற தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிச்சான்றிதழ் (06 மாதங்களுக்கு /720 மணித்தியாலங்களுக்கு குறையாத)<br>(தகவல் தொழில்நுட்ப பட்டம் அடிப்படைத் தகைமையெனில், த.தொ பட்ட பிரிவின்கீழ் புள்ளிகள் வழங்கப்படாது) | 02 | |
| 6. | **உத்தியோகபூர்வ மொழித்தேர்ச்சி (விண்ணப்பதாரி பரீட் சைக்குத் தோற்றிய மொழிமூலம் தவிர்ந்த)** | | 10 |
| | i. க.பொ.த (சா./த.) முதல்மொழியாக | | |
| | அதிவிசேட சித்தி | 06 | |
| | விசேட சித்தி | 04 | |
| | திறமைச் சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |
| | ii. க.பொ.த (சா./த.) இரண்டாம் மொழியாக | | |
| | அதிவிசேட சித்தி | 04 | |
| | விசேட சித்தி | 03 | |
| | திறமைச் சித்தி | 02 | |
| | சாதாரண சித்தி | 01 | |

| தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சை - புள்ளியிடல் பிரிவுகள் | | தனித்தனி புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 7. | **ஆளுமை, தொடர்பாடல் திறன்கள் மற்றும் விசேட திறன்கள்** | | 25 |
| | ஆளுமை | 10 | |
| | தொடர்பாடல் திறன்கள் | 10 | |
| | விசேட திறன்கள் | 05 | |
| | மொத்தம் | | 100 |

**குறிப்பு:**
தகுதியுடைமை மதிப்பீட்டில் நேர்முகத் தேர்வில் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களில் பொருத்தமான காலங்கள் குறிப்பிடப்படவில்லையெனில், சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து எழுத்துமூலமாக அந்த சான்றிதழ்களை உறுதிப்படுத்திக்கொள்வது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். உரிய திகதிகள் குறிப்பிடப்படாத அந்த வகையான சான்றிதழ்கள் எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில், புள்ளிகள் வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்படமாட்டா.

08. **விண்ணப்பிக்கும் முறை :**

i. இந்த அறிவித்தலிலுள்ள மாதிரி விண்ணப்பபடிவத்திற்கேற்ப, ஏ-4 அளவிலான கடதாசியில், 01 இலிருந்து 06 வரையான விடயங்கள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை 2 ஆம் 3 ஆம் பக்கங்களிலும் தயாரிக்கப்படுதல் வேண்டும். ஒரு காகிதத்தின் இரண்டு பக்கங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பங்கள் உண்மையான விண்ணப்பதாரியினால், அவரது சொந்த கையெழுத்தால் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். சிங்களம் அல்லது தமிழில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களின் மேல் பக்கத்தில், பரீட்சையின் பெயர் தமிழ் அல்லது சிங்களத்துடன், ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். மாதிரிப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாத மற்றும் தேவைப்படும் தகவல்கள் சரியாக வழங்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களின் நிழற்படப் பிரதிகளை வைத்திருத்தல் உசிதமானது.

ii. விண்ணப்பதாரர் எந்த மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளாரோ, அந்த மொழியிலேயே விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

iii. முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், பதிவுத் தபாலில், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு, 10.05.2021 அன்றோ, அதற்கு முன்னதாகவோ கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்பட வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2020 (2021)" என தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கடிதஉறையில் இடது பக்க மேல் மூலையில் ஒரு பெட்டிக்குள் (2 செ. மீ. × 2 செ. மீ.) ஆங்கில எழுத்தான "S" தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. எல்லா வகையிலும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்தமை அல்லது தபாலில் ஏற்பட்ட தாமதம் போன்ற காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

v. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை குறித்து அறிவிக்கப்படமாட்டாது. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களில் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான ரசீதை, விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி, விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கு, அவர்கள் குறிப்பிட்ட வயதெல்லைக்குட்பட்டவர்கள் என்ற அடிப்படையில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும், இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அது பற்றி பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படும். பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்களுக்குள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள், பரீட்சைத் திணைக்களத்தின், "ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிவாரிப் பரீட்சைகள்" கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது, தோற்றிய பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். வெளிமாவட்ட விண்ணப்பதாரர்களெனில், விசாரணைகளை ஒரு கடிதத்தில் எழுதி, அதில் ஒரு தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, பரீட்சைகள் திணைக்களத்திற்கு

தொலைநகலில் அனுப்பினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர் தாம் அனுப்பும் தொலைநகல் எண்ணைக் குறித்து வைத்தல் பயனுள்ளது. அவ்வாறான விசாரணைகளின் போது, பரீட்சைத் திணைக்களத்திற்குத் தேவைப்படும் தகவல்களை வழங்குவதற்கு வசதியாக விண்ணப்பதாரர், தனது பரீட்சை விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்பியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி போன்றவற்றை வைத்திருப்பது பயனளிக்கத்தக்கதாக அமையும்.

vi. விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதனால் அவர் பரீட்சைக்கான தகைமைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்துள்ளாரென்றோ பதவிக்குப் பொருத்தமானவரென்றோ எவ்வகையிலும் கருதப்படலாகாது.

09. **பரீட்சைக்கான அனுமதி**:

I. அனுமதி அட்டையிலும் விண்ணப்பத்திலும் இடப்படும் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரச நிறுவனமொன்றில் பணியாற்றும் பரீட்சார்த்தி தனது கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடமோ அல்லது அத்தகைய நிறுவனத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கென அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறெந்த அலுவலரிடமோ அத்தாட்சிப்படுத்திக் கொள்ள வேண்டும். பிற விண்ணப்பதாரர்களைப் பொறுத்த வரையில், அரசாங்க பாடசாலையின் அதிபர், பிரிவின் கிராம சேவகர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு, இராணுவம், கடற்படை அல்லது விமானப் படையில் நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது ஒரு நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அதிகாரி, பௌத்த விகாரையில் பதவியில் உள்ளவர், நாயக்க பௌத்த துறவி, வேறேந்த மதவழிபாட்டு இடத்திலும் பதவியில் இருப்பவர் அல்லது மதகுரு போன்றவர்களிடம் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திக் கொள்ளலாம். விண்ணப்பதாரர், தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கையளிக்கவேண்டும். அனுமதி அட்டையைக் கையளிக்கத் தவறுவோர், பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். விண்ணப்பதாரிகள் இப்பரீட்சை தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் பெறுபேறுகளுக்கும் உட்பட்டவர்கள் ஆவார். இச்சட்டங்களை மீறும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

II. ஒரு விண்ணப்பதாரர், தனக்கென குறித்து ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும், முதல் நாள் பரீட்சையின்போது, பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, தத்தமது அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

10. **பரீட்சைக்கான கட்டணம்**:

பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். இக்கட்டணம் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக தபால்/ உபதபால் கந்தோரில் செலுத்தப்படவேண்டும். அல்லது 20-03-02-13 என்ற வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும். பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் உரிய இடத்தில் சரியாக ஒட்டப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணம் தவிர மேலதிகமான கட்டணங்கள் ஏதும் அறவிடப்படமாட்டாது என்பது அறியத்தரப்படுகிறது. காசோலைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதையும் பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்க கட்டணம் செலுத்தப் பட்டதற்கான பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை வைத்திருத்தல் பயனுள்ளது.

**குறிப்பு** :

எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சையிலிருந்து விலகிய அல்லது பரீட்சைக்குச் சமூகமளிக்காத, அல்லது பரீட்சைக்குத் தோற்றி ஆனால் அதற்கு தகுதியற்றவராகக் காணப்பட்ட விண்ணப்பதாரர், பரீட்சைக் கட்டணத்தின் ஒரு பகுதியையோ அல்லது அதை முழுமையாகவோ திரும்பப்பெறவோ அல்லது வேறோரு பரீட்சைக்கு மாற்றவோ உரிமையற்றவராவார்.

*11.* **விண்ணப்பதாரரின் ஆள் அடையாளம்:**

ஒரு விண்ணப்பதாரர், தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் தனது பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியடையும் பொருட்டு தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்கென, பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழையும்போது முகம் மற்றும் காதுகளை மூடாமல் அவர்களின் ஆள்அடையாளம் உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். தமது ஆள் அடையாளங்களை நிரூபிக்க மறுக்கும் பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நடத்தும் அதிகாரிகள் அவர்களது ஆளடையாளங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு பரீட்சை முடியும் வரையில் தொடர்ந்தும் அவர்கள் தமது முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

*12.* **பெறுபேறுகள் வழங்கல்:**

இந்த அறிவித்தலின் பந்தி 06 இல் குறிப்பிடப்பட்டவாறு அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள், தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்படுவர். இரு பரீட்சைகளிலும் அவர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையிலான பெறுபேறுகள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும். அதன் பின்னர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வழிகாட்டலின்பேரில், பெறுபேறுகள் சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையதளத்தில் பிரசுரிக்கப்படும்.

*13.* **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

ஆட்சேர்ப்புச்செய்வதற்குமுன்னதாக,விண்ணப்பத்தில்வழங்கப்பட்டவிபரங்கள்பொய்யானதென்றோ தவறானதென்றோ அறியப்படின், அந்த விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியின் நியமனத்திற்குப் பின்னர், அவர் தவறான அல்லது பொய்யான விபரங்களை வழங்கியிருந்தாரென அறியப்படின், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கேற்ப அவர் சேவையிலிருந்து பணி நீக்கம் செய்யப்படுவார்.

*14.* இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மற்றும் வழிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் ஆட்பட்டவர்களாவர். இந்த விதிகளை மீறுதல், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தண்டனை விதிப்பதற்கு காரணமாகிவிடும்.

*15.* இந்த வர்த்தமானி அறிவித்தலில் வழங்கப்படாத எந்த விடயமும், அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டதற்கேற்ப செயற்படுத்தப்படும். இந்த வெற்றிடங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ ஆன உரிமை, அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குள்ளது.

*16.* இந்த உரையில் ஏதேனும் மாறுபாடுகள் காணப்படின், சிங்கள மூலமே முன்னிற்கும்.

அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கட்டளைக்கமைவாக,

அட்மிரல். பேராசிரியர் ஜனநாத் கொலம்பகே,
செயலாளர்,
வெளிநாட்டமைச்சு.

வெளிநாட்டமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2021, ஏப்பிறல் 09.

மாதிரிவிண்ணப்ப படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**வெளிநாட்டமைச்சு**

இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2020 (2021)

☐
(அலுவலக பாவனைக்கு மட்டும்)

பரீட்சைக்கான மொழி மூலம்:
(பெட்டிக்குள் உரிய இலக்கத்தை இடுக)

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

01. (i) (அ) முதல் எழுத்துக்கள் கடைசியில் வரும்படியாக, பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..........................................................................................................................................

(உ+ம்: SUMANASIRI, E.D.C.B.A.)

(ஆ) முதல் எழுத்துக்கள் கடைசியில் வரும்படியாக, பெயர் (தமிழில்/சிங்களத்தில்):

(ii) (அ) முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
..........................................................................................................................................
(ஆ) முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (தமிழில்/சிங்களத்தில்):
............................................................................................................

02. முகவரி:
(i) வதிவிடம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ..........................................................................................
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்)
(ii) அலுவலகம்: ..........................................................................................
(iii) தொலைபேசி இலக்கம்:
அலுவலகம்: ..........................................................................................
வதிவிடம்: ..........................................................................................

03. பாலினம்: ☐ (பெட்டிக்குள் உரிய இலக்கத்தை இடுக)

ஆண் - 0, பெண் - 1

04. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. வர்த்தமானிஅறிவித்தலின் '6 × எ' இல் குறிப்பிடப்பட்ட "மொழித்தேர்ச்சி" பாடத்திற்கென

விண்ணப்பிக்கப்பட்ட மொழி: ☐ (பெட்டிக்குள் உரிய இலக்கத்தை இடுக.)

(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)

06. தொலைபேசி இல. :

(i) அலுவலகம் தொ. பே. : ☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) கைத்தொலைபேசி இல. : | | | | | | | | | |

07. (i) பிறந்த திகதி : ஆண்டு: | | | | மாதம்: | | திகதி: | |

(ii) விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது:
வருடங்கள்: | | | | மாதங்கள்: | | நாட்கள்: | |

08. தேசிய இனம்: | | (பெட்டிக்குள் உரிய இலக்கத்தை இடுக.)

(சிங்களம்-1, தமிழ் -2, இந்திய தமிழ் -3, முஸ்லிம் -3, பிற-5)

09. குடியியல் அந்தஸ்து: | | (பெட்டிக்குள் உரிய இலக்கத்தை இடுக.)

திருமணமாகாதவர் - 1, திருமணமானவர் - 2

10. இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்கு நீங்கள் முன்னர் தோற்றியிருப்பின், வருடங்களைக் குறிப்பிடுக:
(அ) ................................................
(ஆ) ................................................
(இ) ................................................

11. நீங்கள் அரசாங்க சேவையில் ஒரு பதவியில் உள்ள ஒரு பட்டதாரியெனில், உங்கள் பதவிப்பெயர்: ....................................
..............................................................

12. பல்கலைக்கழக பட்டம்: (நீங்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுள்ளவரா என்பதை உறுதிப்படுத்துவதற்காக, தயவுசெய்து இந்த அறிவித்தலின் 2 (i) ஐ கவனமாக படிக்கவும்) :

(i) பல்கலைக்கழகத்தின்/நிறுவகத்தின் பெயர்: .......................................................
(ii) பெற்ற பட்டம் : .......................................................
(iii) பட்டம்வழங்கப்பட்ட திகதி : .......................................................
(iv) பொது பட்டம்/சிறப்பு பட்டம் : .......................................................
(v) பாடங்கள் : .......................................................
(vi) வகுப்பு : .......................................................

13. வேறு ஏதாவது கல்விசார்/ தொழிற்றிறன்சார் தகைமைகளைக்கொண்டிருப்பின் (பட்டப்பின் படிப்பு/ டிப்ளோமா/ வெளிநாட்டு மொழிகளின் திறன்ஆகியன) அவற்றைத் தருக:
.............................................................................................................................................................................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்காக பெறப்பட்ட பற்றுச்சீட்டின் விபரங்கள்:
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபாலகந்தோர் : .....................................................................................................
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும்: .......................................................
(iii) செலுத்தப்பட்ட கட்டணம்: .......................................................

பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும்.
(இந்த பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியை வைத்திருத்தல் பயனளிக்கும்)

15. விண்ணப்பதாரரின் உறுதி மொழி:

இங்கே என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். பதவிக்கான தெரிவுக்கு முன்பாகவோ அல்லது பின்னரோ என்னால் வழங்கப்பட்ட

விபரங்கள் தவறானவை அல்லது பொய்யானவை என்று கண்டுபிடிக்கப்பட்டால், நான் தகுதி நீக்கம் அல்லது பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதை நான் புரிந்துகொண்டுள்ளேன். மேலும், இந்த பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:...............

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தல்:

இந்த விண்ணபத்தை அனுப்பும் திரு./ திருமதி/ செல்வி ...................................................... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் பரிட்சயமானவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை ...................................................... அன்று எனது முன்னிலையில் இட்டார் என்றும், அவர் பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அதற்கான பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்துள்ளார் என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

....................................................,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்: ................
பதவி: ................
முகவரி: ................
திகதி: ................

(உத்தியோகபூர்வ முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்)

17. திணைக்களத் தலைவரின் உறுதியுரை

(ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

திரு/ திருமதி/ செல்வி: ................................................................................................... என்பவர், ......................... ............................. இற்கு முன்னரான 5/................ வருடங்களில் (அ) தனது சம்பள அதிகரிப்புகள் அனைத்தையும் பெற்றுள்ளார் என்பதனையும், (ஆ) எச்சரிக்கை தவிர்ந்த எத்தகைய ஒழுங்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகவில்லை என்பதனையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

இந்த விண்ணபத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதையும் பரீட்சைக்குரிய கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டும் இங்கே இணைக்கப்பட்டுள்ளதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

இந்த உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், உடனடியாக தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார்.

..........................................,
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பதவியும்.

திகதி :.................

04-494

## நீதிச்சேவை ஆணைக்குழு

அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப் படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021 இற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2. **சேவை நிபந்தனைகள்.-**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 11.09.2018 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக்குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2.4 அரசாங்க நிர்வாக சுற்றுநிரூபம் 01/2014 இற்கு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது போல அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்குரிய அரசாங்க மொழித் தேர்ச்சியினை சேவைக்கு உள்வாங்கப்பட்டு 05 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. சம்பளம் : 03/2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 24.06.2016 ஆம் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்குரிய (MN 2 -2016 ) ரூபா 28,940 - 10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 47,990 (ஆரம்ப சம்பளம் ரூபா 28,940) ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது.

5. **தகைமைகள்**.- அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித்திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(ஈ) அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
(உ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் சிங்கள மொழி இற்கும், நீதிமன்ற தட்டெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ் மொழி இற்கும், நீதிமன்ற தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழி இற்கும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

II. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தொழில்நுட்ப கல்லூரி அல்லது அரசாங்க பதிவுடைய பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றில் தட்டெழுத்து பாடநெறியினை அல்லது தட்டெழுத்து பாடமும் உள்ளடங்கியுள்ள கணனிப் பாடநெறியினை சிறந்த முறையில் பயின்று அதில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 10.05.2021 ஆம் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடபடிமுறைகள்**.-

இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் | 100 | 40 |
| 02. | உளச்சார்பு | 100 | 40 |
| 03. | தட்டெழுத்து | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணக்கையினை கருத்திற் கொண்டு தட்டெழுத்து பரீட்சையில் சித்திபெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாத்திரமே "மொழித்திறன்" மற்றும் "உளச்சார்பு" வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

தட்டெழுத்து செய்ய தாம் விண்ணப்பிக்கும் பிரிவுக்கு ஏற்புடைய வினாப்பத்திரத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். கடமை நிமித்தம் அபேட்சகருக்குள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிக்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

**பரீட்சைக்கான பாடத்திட்டம்.-**

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01 | மொழித் திறன் | இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும். |
| 02 | உளச்சார்பு | இவ்வினாப்பத்திரமானது பரீட்சாத்தியின் எண் சார்ந்த திறன், தர்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும். |
| 03 | தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம்) | தட்டெழுத்து (சிங்களம்)<br>தரப்படும் 400 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |
| | | தட்டெழுத்து (தமிழ்)<br>தரப்படும் 400 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |
| | | தட்டெழுத்து (ஆங்கிலம்)<br>தரப்படும் 600 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |

**குறிப்பு :** அனைத்து எழுத்து மூல விடைப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள் மற்றும் / அல்லது பிரயோக ரீதியிலான வினாக்களைக் கொண்டவையாகும்.

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து கீழ்நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

**பரீட்சை பெறுபேறுகள்.-** நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

8. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை .-** விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

9. **பரீட்சைக் கட்டணம் .-** பரீட்சைக் கட்டணம் ரூபா.400 ஆகும். இக்கட்டணத்தை "நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளனவா என விண்ணப்பதாரி தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலமே தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 10.05.2021 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021" என்பதனை தெளிவாக எழுத வேண்டும். 10.05.2021 ஆந் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சைக்கு தோற்றல் - விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிடவேண்டும். கொழும்பிற்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள் எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினை பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கிய கோரிக்கை கடிதமொன்றை 0112 421 206 அல்லது 0112 446 111 இலக்கங்களுக்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும்.

12. பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம் - பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

13. **பரீட்சைக்கு தோற்றுதல்.-**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க

வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டவிதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

14. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2021, ஏப்பிறல் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2021

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி
பரீட்சைக்கு தோற்றும் மொழி
சிங்களம் -1
தமிழ் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

02. பிரத்தியேக தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி ................................................................ ...........................
..........................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

2.2 முழுப்பெயர் : ..........................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்)

2.3 முழுப்பெயர் : ..........................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.4 பிரத்தியேக முகவரி : ..................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.5 வசிக்கும் மாவட்டம் : ..................................................................................................................

2.6 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்தில்) : ....................................................
..........................................................................................................................

2.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.8 பிறந்த திகதி : .....................................

வருடம் : மாதம் : திகதி :

2.9 2021.05.10 திகதிக்கு வயது

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

2.10 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

2.11 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2

2.12 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ......................... கையடக்க தொலைபேசி : ..............

தொலைநகல் : .....................

03. கல்வித் தகைமைகள் :

3.1 க.பொ.த. (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்:

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................

(2) பரீட்சை சுட்டெண் : ............................

(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் | விடயம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

3.2 க.பொ.த. (உ./த.) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................

(2) பரீட்சை சுட்டெண் : ............................

(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

04. தட்டெழுத்து தொடர்பாக பயின்றுள்ள பாடநெறிகள் : ....................................................
(பூர்த்தி செய்துள்ள பாடநெறிகளின் சான்றிதழ்களை இணைக்குக.)

05. வேறு தகைமைகள் : ..............................................................................................................................................
..........................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?
(உரிய கூட்டினுள் ( √ ) அடையாளமிடுங்கள்), (ஆம் எனின், விபரங்களை குறிப்பிடுக.)

.......................................................................... ஆம் இல்லை

..........................................................................

07. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...................................

பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................

செலுத்திய பணம் : ...................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.) |

08. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை தாங்கிக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

..................... ......................................

திகதி விண்ணப்பதாரியன் கையொப்பம்

09. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ............................. என்பவரை நான் பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் ......................... திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................. ............................................

திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................
பதவி : ......................................................
முகவரி : ...................................................
(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

**திணைக்களத் தலைவரின் விதந்துரை**

இந் ............................................ சேவையாற்றும் திரு/திருமதி/செல்வி ..........................என்பவருக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் 10.05.2021 திகதிக்கு 35 வயதிற்கு மேற்படாதவர் என்பதனையும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி :............ .................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
உத்தியோகப்பூர்வ முத்திரை :-

04-593/1

## நீதிச்சேவை ஆணைக்குழு

### அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021 இற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2. **சேவை நிபந்தனைகள்.–**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 11.09.2018 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக்குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2.4 அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 01/2014 இற்கு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது போல அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்குரிய அரசாங்க மொழித் தேர்ச்சியினை சேவைக்கு உள்வாங்கப்பட்டு 05 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. **சம்பளம்.–** 03/ 2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 24.06.2016 ஆம் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்குரிய (MN 2 -2016) ரூபா 28,940 - 10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 47,990 (ஆரம்ப சம்பளம் ரூ. 28,940) ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

2. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது.

3. **தகைமைகள்**.- அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித்திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(உ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் சிங்கள மொழி இற்கும், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ் மொழி இற்கும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

II. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தொழில்நுட்ப கல்லூரி அல்லது அரசாங்க பதிவுடைய பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பாடநெறியினை சிறந்த முறையில் பயின்று அதில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 10.05.2021 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. **பரீட்சை நடபடிமுறைகள்**.- இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் | 100 | 40 |
| 02. | உளச்சார்பு | 100 | 40 |
| 03. | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டு சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பரீட்சையில் சித்திபெற பெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாத்திரமே "மொழித்திறன்" மற்றும் "உளச்சார்பு" வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து வினாப்பத்திரங்களுக்கு ஆங்கில மொழி மூலம் மாத்திரமே விடையளிக்க வேண்டும். கடமை நிமித்தம் அபேட்சகருக்குள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிக்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

***பரீட்சைக்கான பாடத்திட்டம்.-***

| | வினாப்பத்திம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01 | மொழித் திறன் | இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும். |
| 02 | உளச்சார்பு | இவ்வினாப்பத்திரமானது பரீட்சார்த்தியின் எண் சார்ந்த திறன், தர்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும். |
| 03 | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்) | சுருக்கெழுத்து (சிங்களம்)<br>நிமிடத்திற்கு 70 சொற்கள் என்ற ஆகக்குறைந்த வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியொன்றை சுருக்கெழுத்து செய்து அதனை நிமிடத்திற்கு 07 சொற்கள் என்ற வேகத்தில் பிரதியாக்கல் வேண்டும்.<br><br>தட்டச்சு (சிங்களம்)<br>தரப்படும் 500 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 25 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |
| | | சுருக்கெழுத்து (தமிழ்)<br><br>நிமிடத்திற்கு 70 சொற்கள் என்ற ஆகக்குறைந்த வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியொன்றை சுருக்கெழுத்து செய்து அதனை நிமிடத்திற்கு 07 சொற்கள் என்ற வேகத்தில் பிரதியாக்கல் வேண்டும்.<br><br>தட்டச்சு (தமிழ்)<br>தரப்படும் 500 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 25 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |

**குறிப்பு**.- அனைத்து எழுத்து மூல விடைப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள் மற்றும் / அல்லது பிரயோக ரீதியிலான வினாக்களைக் கொண்டவையாகும்.

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து கீழ் நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

***பரீட்சை பெறுபேறுகள்*** - நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

8. ***பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை*** .— விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூ.400 ஆகும். இக்கட்டணத்தை "நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை**.–

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளனவா என விண்ணப்பதாரி தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலமே தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 10.05.2021 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021" என்பதனை தெளிவாக எழுத வேண்டும். 10.05.2021 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. **பரீட்சைக்கு தோற்றல்**.- விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிடவேண்டும். கொழும்பிற்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள் எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினை பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கிய கோரிக்கை கடிதமொன்றை 0112 421 206 அல்லது 0112 446 111 இலக்கங்களுக்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும்.

12. பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம் - பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

13. **பரீட்சைக்கு தோற்றுதல்.-**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டவிதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

14. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.
நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்.

2021, ஏப்ரல் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

☐

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி
பரீட்சைக்கு தோற்றும் மொழி
சிங்களம் -1
தமிழ் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

02. பிரத்தியேக தகவல்கள் :
2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு/திருமதி/செல்வி ..........................................................................................
..........................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

2.2 முழுப்பெயர் : ..........................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்)

2.3 முழுப்பெயர் : ..........................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.4 பிரத்தியேக முகவரி : ................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.5 வசிக்கும் மாவட்டம் : ................................................................................................................

2.6 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்தில்) : ...................................................
..............................................................................................................................

2.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2.8 பிறந்த திகதி : .....................................

ஆண்டு : | | | | |   மாதம் : | | |   திகதி : | | |

2.9 2021.05.10 திகதிக்கு வயது

வருடங்கள் : | | |   மாதங்கள் : | | |   நாட்கள் : | | |

2.10 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2 | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

2.11 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2 | |

2.12 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : .........................   கையடக்கத் தொலைபேசி : ...............

தொலைநகல் : .....................

03. கல்வித் தகைமைகள் :

3.1 க.பொ.த.(சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள்:

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் | விடயம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

3.2 க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

04. சுருக்கெழுத்து தொடர்பாக பயின்றுள்ள பாடநெறிகள் : ....................................................
(பூர்த்தி செய்துள்ள பாடநெறிகளின் சான்றிதழ்களை இணைக்குக.)

05. வேறு தகைமைகள் : ...............................................................................................................................................
.....................................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?
(உரிய கூட்டினுள் ( √ ) அடையாளமிடுங்கள்), (ஆம் எனின் விபரங்களை குறிப்பிடுக.)

........................................................................... ஆம் : ☐ இல்லை : ☐

...........................................................................

07. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...................................

பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................

செலுத்திய பணம் : ...................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.) |

08. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை தாங்கிக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

..................... ......................................
திகதி விண்ணப்பதாரியன் கையொப்பம்

09. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................. என்பவரை நான் பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் ........................ திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ..............................................
திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................

பதவி : ......................................................

முகவரி : .................................................

(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

***திணைக்களத் தலைவரின் விதந்துரை***

*இந் ………………..………………………………………... சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ……………………… என்பவருக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம் / தமிழ்) தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் 10.05.2021 திகதிக்கு 35 வயதிற்கு மேற்படாதவர் என்பதனையும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.*

*திகதி :............*

.................................................
*திணைக்களத் தலைவரின் கையொப்பம்*
*உத்தியோகப்பூர்வ முத்திரை :-*

*04-593/2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*